கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com

தலைவர்:- உயர்திரு க.அரியரத்தினம். 07823535094

இலையுதிர்கால இதழ்
NEWS BULLETIN
AUTUMN 2019
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
15/12/2019	கலைப் பாடங்கள் நடைபெற்ற பின்னர் நத்தார் விடுமுறைக்காக பாடசாலை மூடப்படும்.
அனைவருக்கும் இனிய நத்தார் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்	
05/01/2020	கலைப் பாடங்கள் வழமைபோல் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வளாகத்தில் நடைபெறும்.
11/01/2020	தமிழ்ப் பாடசாலை மீண்டும், சகல வளங்களையுமுடைய புதிய பாடசாலையான President Kennedy School, Rookery Lane, Coventry CV6 4GL ல் காலை 9:45 மணிக்குப் பாடசாலைக் கீதத்துடன் ஆரம்பமாகும்.
23/05/2020	கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் ஆண்டு விழா நடைபெறும்.

பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையினால் வருடாவருடம் நடத்தப்படுகின்ற, தமிழ் மொழிப் பரீட்சையில், இந்த வருடமும் சித்தியடைந்த மாணவர்கள், கடந்த 19/10/2019 அன்று, பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையினரால் அனுப்பிவைக்கப்பட்ட சான்றிதழ்கள், வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இந்தப் பரிட்சையில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் வாழ்த்துக்கள்.

இப்பரீட்சையில் தங்க, வெள்ளி, மற்றும் வெண்கலப் பதக்கங்களைப் பெறும் மாணவர்களுக்குப் பிரித்தானிய தமிழ்ப் பரிட்சைச் சபையினால் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட பரிசளிப்பு விழாவில் (இடம், காலம் என்பன பின்னர் அறிவிக்கப்படும்) அப்பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும் என்பதையும், ஏனைய திறமையான பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்குக் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தினால், நடைபெற இருக்கும் ஆண்டு விழாவில் பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது பாடசாலையின் சார்பாக நடைபெற்ற இந்த ஆண்டுக்குரிய சரஸ்வதி பூசையின் சில பதிவுகள்

நவராத்திரி விழா என்பது மக்களைத் துன்புறுத்தி வந்த மகிசாசுரன் என்ற அரக்கனுடன், ஆதிபராசக்தி 9 நாட்கள் போரிட்டு 10ஆவது நாளில் அவனை வதம் செய்து வெற்றிகொண்டதாக நம்பப்படுகிறது. இதனை நினைவுகூரும் வகையில் நவராத்திரி விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

சக்தி இல்லை என்றால் இந்த உலகம் இயங்காது. அந்த சக்தியை வழிபடுவதற்காக உருவானதுதான் நவராத்திரிப் பண்டிகை. நாம் பேச இயங்க, செயல்பட சக்தி வேண்டும். சிவன் அதை உணர்ந்துதான் சக்தியை தன்னுடன் இணைத்துக்கொண்டார்.



இச்சா, கிரியா, ஞான சக்தி என மூன்று சக்திகளாக வழிபடுகின்றோம். வாழ்க்கையில் கல்வி, செல்வம், வீரம் ஆகிய மூன்றும் முக்கியம். மூன்றும் கலைமகள், அலைமகள், மலைமகள் என மூன்று சக்திகளை வழிபடுகின்றோம். வாழ்க்கையில் இந்த மூன்றும் முக்கியம்.

வீரத்திற்கு மூன்று நாட்கள், செல்வத்திற்கு மூன்று நாட்கள், கல்விக்கு மூன்று நாட்கள் ஒதுக்கி, ஒன்பது நாட்கள் வழிபடுகின்றோம். கொலு வைத்துக் கொண்டாடி, அம்பிகையை வழிபடுவதால் நமக்கு சக்தி கிடைக்கும். அந்த சக்தியை நாம் நல்வழிப்படுத்த வேண்டும்.

கிறிஸ்து பிறப்பு விழா (நத்தார் பண்டிகை)

உலகமெல்லாம் மிக விமரிசையாகக் கொண்டாடப்படும் பெருவிழாவான கிறிஸ்மஸ் திருவிழா உலகின் மீட்பராம் நம் இயேசு பாலன் வந்துதித்த நாளை நினைவு கூறுவதே இந்நாள் ஆகும்.

இயேசு கிறிஸ்து பிறந்த இந்த மகிழ்ச்சியான தினத்தில் பரிசுத்தமான உள்ளத்தோடு, பிரிவினைகள் அகற்றப்பட்டு மக்கள், சாந்தியும், சமாதானமும், சகோதரத்துவமும் பெற்று சகவாழ்வு வாழ வேண்டும் என்பதே நோக்கமாகும்.

இத்தினத்தை முன்னிட்டு மார்கழி மாதம் முழுவதுமாக ஒருவரை ஒருவர் அன்போடு வீட்டுக்கழைப்பதும் உறவினர்கள் வீட்டுக்குச் செல்வதும், இயேசு பாலனின் வருகைக்கான ஆயத்த வழிபாடுகளைச் செய்வதுடன் கூட்டமாக கூடி ஆராதிப்பது, நத்தார்ப் பாப்பா வீட்டுக்கு வந்து பாடல் பாடி, நடனம் ஆடி, இனிப்புகள் வழங்கி மிகவும் குதூகலமாக ஆர்ப்பரித்துக் கொண்டாடுவார்கள்

கடவுள் மனிதனாக இம்மண்ணில் அவதரித்த பெருவிழாவில் கண்களால் தரிசிக்க முடியாத நம் கடவுளை, தொட்டுவிடும் தொலைவில் ஆன்மீக உணர்வில் கலந்து, ஆழ்மன இருளகற்றி, பேரொளியை உணர்த்துவதும், அமைதிக்கான வழியை அடையாளங் காட்ட வந்து பிறந்த பாலகன் இயேசுவை, அகமகிழ்ந்து புனிதமான கிறிஸ்மஸ் திருவிழாவாகக் கொண்டாடுவார்கள்.

வறுமையைத் தேர்ந்தெடுத்து, பெத்தலகேம் என்னும் சிறிய ஊரில் மிக வறுமையிலும் எளிமையாகவும், ஏற்றமிகு வாழ்வுக்கு வழிகாட்டியாக அவதாரமனவரை ஆனந்தத்துடன் ஆர்ப்பரித்துக் கொண்டாடுவார்கள்.

*"**கடவுள் நம்மோடு**" என்ற பொருளுடன், விண்ணிலிருந்து வந்த விடியலாக இயேசு கிறிஸ்துவின் பிறப்பு அமைவதோடு, காரிருளில் நடந்துவந்த மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக, பேரொளி வீசி உலகை தேடிவந்த நாளாகப் பாலகன் இயேசு வந்ததை மனுக்குலத்தின் சாவின் நிழல் சூழ்ந்த மக்கள் மேல் முதன்முதலாகச் சுடரொளியை உதிர்த்துவிட்டு "மனிதனே உனக்காக ஒளி தோன்றியுள்ளது. ஆண்டவரின் மாட்சிமை உன்மீது உதித்துள்ளது எழுந்து வா" என இயேசு பாலன் நம்மை அழைத்தார்.*

அதனால்தான் கிறிஸ்துவின் பிறப்பு விழாவை, அன்பின் விழாவாகவும், பகிர்வின் விழாவாகவும், நம்பிக்கையின் விழாவாகவும் விடுதலையின் விழாவாகவும், உணர்த்தப்படுகிறது.

நமது விழுமியங்கள் ஆன அன்பு, நீதி, சமத்துவம், சகோதரத்துவம், பகிர்வுகள் போன்ற மாண்புகள் நிறைந்த புரிதலை வளர்த்துக் கொள்ளுதல் மிக மிக அவசியம் என்பதாகும். ஒவ்வொரு மனிதனையும் முழு மனிதனான இயேசுவின் சாயலாகப் பார்க்கும் புதுப்பார்வை ஒவ்வொருவருக்கும் பிறக்கும் வண்ணமாக, நாம் அனைவரும் புது மனிதனாக மாற வேண்டும் என்ற நோக்கோடு, வரும் நத்தார் பண்டிகைப் பெருவிழாவை உள்ளம் கனிய வரவேற்போம். அகமகிழ்ந்து கொண்டாடுவோம்.

நன்றி
திருமதி ரஜனி ஜோன்சன்
ஆசிரியை

சமூக தொடர்பாடற் சாதனங்களும் இன்றைய வாலிபர்களும்

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்ற பாரதியின் கூற்றுக்கேற்ப, இன்றைய நவீன விஞ்ஞானத்தின் விந்தையினால் கண்டுபிடிக்கப்பட்ட சாதனங்களில் ஒன்றாகச் சமூக தொடர்பாடற் சாதனங்கள் விளங்குகின்றன.

அவையாவன முகநூல், தொலைபேசி, தொலைக்காட்சி, மின்னஞ்சல் எனப் பலவாகக் காணப்படுகின்றன. இன்று இவற்றின் பாவனையை எடுத்து நோக்கும் போது, உணவு இன்றி மனிதன் வாழ்ந்தாலும் சமூகத் தொடர்பு சாதனங்களின்றி வாழ முடியாது என்னும் அளவுக்கு வாலிபர்களும் முதியோர்களும் மாறிவிட்டனர்.



சமூகத் தொடர்பாடல்கள் இன்றைய கால வாலிபர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமான ஒன்றாக விளங்குகின்றது. உதாரணமாகக் கல்விசார் விடயங்கள், தொழில்நுட்ப

விடயங்கள், வெளிநாட்டு உள்நாட்டு வேலை வாய்ப்பு என்பவற்றுக்கும், பொழுது போக்குவதற்கும் மிகப் பயனாகவுள்ளது.

இவ்வாறு பல நன்மைகள் காணப்பட்ட போதிலும், இன்றைய எமது வாலிப சமூகம் இதனை, நேரத்தையும் தங்களது திறமையையும் மழுங்கடிக்கச் செய்வதற்கே பயன்படுத்துகின்றனர். படிப்பிற்காகச் செலவு செய்ய வேண்டிய நேரத்தைப் படம், விளையாட்டு, மற்றும் சமூக சீர்கேட்டு விடயங்களுக்கும் பயன்படுத்துகின்றனர். "இன்றைய வாலிபர்கள் நாளைய தலைவர்கள்" என்ற கூற்றுக்கேற்ப எமது வாலிபர்கள் இவ்வாறு சென்றால், எமது பிற்காலத் தலைமுறையின் கதி என்னவாகும்? சிந்தியுங்கள் வாலிபர்களே.

எனவே சமூகத் தொடர்பு சாதனங்களை எமக்கும், எமது சமூகத்திற்கும் நன்மையளிக்கும் விடயங்களுக்குப் பயன்படுத்துவோம்.

நன்றி
மிதுசன் ஜெயகாந்தராசா
தரம் 8

நான் கண்ட அழகிய கனவு
(சிறுகதை)

பரீட்சைக்கு நிறையப் படித்ததால் மிகவும் களைப்பாக இருந்தது. கிட்டத்தட்ட



இரவு ஒரு மணிக்கு அசந்து தூங்கி விட்டேன்.

எனக்கு வியப்பாக இருந்தது. அந்த ஆகாயம், நட்சத்திரங்கள் இன்னும் என்னென்னவோ! சந்திர மண்டலமே உன்னை நான் எப்போது காண்பேன்? அனைத்து நட்சத்திரங்களையும் ஒன்றிணைத்து இந்த அதிசய உலகத்திற்குக் காட்சியளிக்கின்றாயே நீ யார்?

எனக்கு வயது பத்து இருக்கும். அப்போதுதான் என்னுடைய அண்ணா மற்றும் அப்பா எனக்கு விண்வெளி என்றால் என்ன என்று உணர்த்தினார்கள். எனக்கு அப்பொழுது தான் இதன் மேல் ஆசை அதிகரித்தது.

வயது பன்னிரண்டில் நான் "தோமஸ் நிலா ஆராய்ச்சி குழு" என்ற அந்தப் பாடசாலையில் சேர்ந்தேன். அங்கே தான் சூரியன் என்றால் என்ன சந்திரன் என்றால் என்ன என்று தெரிய வந்தது. அப்போதுதான் விண்வெளிக்குச் செல்வதற்குத் தாயார் என்று கூறியதும், நான் எனது பதினேழாவது வயதில் மட்டுமே விண்வெளிக்குச் செல்லலாம் என ஆசிரியர்கள் சொன்னார்கள். நான் மிகவும் சோகம் அடைந்தேன்.

வயது 17 வந்துவிட்டது. ஆனால் காலம் மாறிவிட்டது. அப்போதுதான் நான் தீயாகப் படித்தேன். அனைத்து ஆசைகளையும் அடக்கி, சகலகலா வல்லவனாக திகழ்ந்தேன்.

வயது 21. இறுதியில் நான் ஆசைப்பட்டது நடக்கப் போகிறது. விண்வெளிவீரர்களின் உடையணிந்து நான் சந்திரமண்டலத்தில் மிதந்தேன். மறுபக்கம் திரும்பும்போது சூரியனைக் கண்டேன். அப்பொழுது விண் கலத்திலிருந்து பரசூட்டில் குதித்தேன். பலமான அடி! நிலத்திலே வீழ்ந்தது போன்ற ஒரு உணர்வு தென்படவே கண் விழித்துப் பார்த்தேன். நான் கட்டிலிலிருந்து கீழே விழுந்ததும், அம்மா வந்து "தம்பி பள்ளிக்கூடத்துக்கு நேரம் போகுது" எனச் சொல்லவும் நேரம் சரியாக இருந்தது.

அப்போது ஜன்னலினூடாகத் தெரிந்த சூரியனை வெறித்துப் பார்த்தபடி, மறுபடியும் சந்திரமண்டலமே உன்னை நான் எப்பொழுது காண்பேன் என்ற கேள்வியோடும், இந்த அழகிய கனவே என் வாழ்க்கைக்கு உந்துகோலாக அமையட்டும் என்று நம்பிக்கையோடும் பாடசாலைக்குத் தயாரானேன்.

நன்றி
மாதவ் கேதீஸ்வரராஜா
தரம் 8

படிப்போம் சிந்திப்போம்
(சிந்தனைக்கு ஒரு குட்டிக் கதை)

இரண்டு எலிகள் ஓரிடத்தில் தமது குடும்பப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தன. அப்போது அந்த வழியாக வந்த இன்னுமொரு எலி அந்த இரண்டு எலிகளின் பேச்சின் குறுக்கே புகுந்தது மட்டுமல்லாது, பின்னர் சம்பந்தமில்லாது பேசிக் கொண்டிருந்தது.

உடனே அந்த எலிகளில் ஒன்று புதிதாக வந்த எலியிடம் "நண்பா பலரின் பேச்சின் நடுவே நாம் புகுந்து, சம்பந்தம் இல்லாமல் பேசுவது பெரிய தவறு தெரியுமா? இப்படித்தான் இங்கே பலபேர்

அடுத்தவர்களின் குடும்ப விடயத்தில் அனாவசியமாகத் தங்கள் மூக்கை நுழைத்துப் பின்பு அவமானப்பட்டுப் போகிறார்கள். நீயும் அவர்களைப் போலல்லவா இப்போது இருக்கின்றாய். எங்கள் மீது கவனம் செலுத்துவது உனக்கு அவசியம் இல்லாத ஒரு விடயம்" என அறிவுரை கூறியது.



இந்தக் குட்டிக்கதை மூலம் நாங்களும் சிந்திப்போம். இதையே எமது வாழ்வில் செயற்படுத்துவோம்.

நன்றி
அருணன் சியாமளன்
தரம் 8

பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது தமிழ்ப் பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில்..... பல தமிழ் மாணவர்கள் உருவாக்கப்பட்டுள்ளார்கள் ஒரு சில ஆசிரியர்களும் உருவாகியுள்ளார்கள்.

2002ல் இருந்து *2019* வரை எமது பாடசாலை பரிணாம வளர்ச்சியடைந்துள்ளது. 6 மாணவர்களுடன் தொடங்கி இன்று 175 க்கும் மேலான மாணவர்கள், 26 ஆசிரியர்கள், தமிழ் மொழி, மற்றும் கலைப் பாடங்கள் என பிரம்மாண்ட வளர்ச்சியுடன் இயங்கிக் கொண்டிருப்பது எம் எல்லோருக்கும் பெருமையே.

ஒவ்வொரு வருடமும் பிரித்தானிய தமிழ்ப் பரிட்சைச் சபை, ***OFAAL*** எனப் பல பரீட்சைகளில் தோற்றிப் பல பதக்கங்களையும், சான்றிதழ்களையும் மாணவர்கள் பெறுவதோடு, கலைப்பாட மாணவர்களும் பல நிகழ்வுகளில் கலந்து கொள்வதோடு, அரங்கேற்றத்தை முடித்து எமது பாடசாலைக்குப் பெருமை சேர்க்கிறார்கள்.

இயக்குனர் ஸ்ரீதர் வெற்றிக் கேடயம்

ஒவ்வொரு வருடம் எமது பாடசாலையில் சிறந்த மாணவருக்கு வழங்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இதுவரைகாலமும் அந்தச் சிறப்புப் பரிசு பெற்றோர் விபரம்

2011-12 செல்வி சாம்பவி தவக்குமார்
2012-13 செல்வி நிவேதா சிவரூபன்
2013-14 செல்வன் டனுயன் சிவநேசன்
2014-15 செல்வி அக்சயா விஜயரட்ணம்
2015-16 செல்வி முகூர்த்தா துறைவன்
2016-17 செல்வி இலக்கியா இரட்ணம், செல்வி வாரணி சரவணதாசன்
2017-18 செல்வி சோபிகா ரஞ்சன்
தமிழ் மொழிக்கான சிறந்த மாணவர் விருது
2010-11செல்வி அபிராமி ரவீந்திரன்
2017-18
தமிழ் மொழி -
செல்வன் அனுஷன் முகுந்தன்.
கலைப்பாடம் –
செல்வி கனகா சர்வானந்தலிங்கம்.

அத்தோடு எமது பாடசாலையிலேயே தொடர்ந்து படித்து, **"கலா ஜோதி"** பட்டம் பெற்று, இந்த பாடசாலையிலேயே கடந்த இரண்டு வருடங்களாக ஆசிரியர்களாகப் பணியாற்றும் செல்வி சாத்வீகா மனோகரன், செல்வன் டனுயன் சிவநேசன் அவர்களையும் வாழ்த்துகின்றோம்.



07/12/19 அன்று வட பிரித்தானிய தமிழ்ச் சங்கத்தினரால் (பாரதி தமிழ்ப்பள்ளி) நடாத்தப்பட்ட, பேச்சுப்போட்டியில் கலந்துகொண்ட கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தமிழ்ப் பாடசாலையின் 1ம் வகுப்பு மாணவி செல்வி ***பிருந்தா சந்திரகாசன்*** *அவர்களுக்கு எமது சங்கத்தின் சார்பாக பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இப்போட்டிக்கு மிகவும் குறுகிய காலத்தில் இவரைத் தயார்ப் படுத்தியமை மிகவும் பாராட்டுக்குரியதாகும்.*



08/12/2019 அன்று லண்டனில் நடைபெற்ற தமிழ் இசைப்போட்டியில். எமது கொவன்றி தமிழர் நலன்புரிச்சங்க மாணவர்கள், மற்றும் ஏழிசைக்குழு மாணவர்கள், பங்குபற்றிய 16 பள்ளிகளில் மூன்றாவது பரிசைப் பெற்றுள்ளார்கள்..
அனைத்து மாணவர்களுக்கும் பாராட்டுக்கள்.